[1984 மார்ச் 9

தலைமைச் செயலகப் பணியாளர்களுக்குச் செய்யப்பட்டுள்ள மருத்துவப் பரிசோதனை வசதி.

243 (*வினா 20824) திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகத்தில் அரசு அலுவலர்களுக்குப் புதிய மருத்துவப் பரிசோதனைக்கு வசதி செய்யப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஆம்.

(ஆ) தலைமைச் செயலகப் பணியாளர்களுக்கென செயலகத்தில் ஒரு மருந்தகம் செயல்படுவதுடன் சென்னை அரசு பொது மருத்துவமனையைச் சேர்ந்த மருத்துவப் பேராசிரியர்கள் வாரம் ஒருமுறை இம்மருந்தகத்திற்குச் சென்று சில தனி வியாதிகளுக்குப் பரிசோதனை செய்து சிகிச்சை அளிக்கிறார்கள்.

காற்றின் வேகத்தைப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்யும் திட்டம்.

231 (வினா 16982) திரு. சி. கோபால் : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காற்றின் வேகத்தைப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்வது பற்றிய திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : காற்றின் வேகத்தைப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்யும் சாத்தியக்கூறுகள் பற்றி மின்வாரியம் ஆராய்ந்து வருகிறது.

(முற்பகல் 9–10)

திரு. தி. அன்பழகன் : தலைவர் அவர்களே, காற்றின் வேகத்தைப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்வதை ஆராய்ந்து வருவதைப் போல் கடல் அலைகளில் இருந்தும் சூரிய ஒளியிலிருந்தும் மின்சார உற்பத்தி செய்வதற்கு ஏதாவது செயல் திட்டம் இருக்கிறதா ? தமிழகத்திலே அப்படி அவைகளைப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்வதற்கு என்ன திட்டம் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால் விவரம் தர இயலும்.